Tsunami Evaluation Coalition:

# Links between relief, rehabilitation, development in Tsunami response

## சுனாமி பிரதிபலிப்போடு நிவாரணம், மறு வாழ்வு மற்றும் வளர்ச்சி இவைகளுக்கான தொடர்புகள்

ஒட்டுமொத்த குறிக்கோளும் எப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்வது, எப்படி அவர்களை புணருத்தாரணம் செய்வது, மறுவாழ்வு அளிப்பது என்ற கருத்துக்களையும், செயல்பாடுகளையும், வழிமுறைகளையும் மேலும் அவைகள் எந்த அளவுக்கு வருங்காலத்தில் அவர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பதை தெளிவுபடுத்துவதே என்பதைப் பற்றியே இருந்தது.

சுனாமி மிக பெரிய பாதிப்பை ஏற்ப்படுத்திவிட்டது சுனாமியின் பாதிப்புகள் வளர்ச்சியையும், முரண்பாடுகளையும், மிகுந்த வறுமையையும் ஏற்ப்படுத்திவிட்டது. அதனால் நிவாரணம் மற்றும் புணருத்தாரணம் முதலியவைகள் நடந்தன. ஏவ்வளவு மக்கள் தொகை இதனால் பாதிக்கப்பட்டார்கள், அவர்களின் இழப்பீடுகள் எத்தனை, எந்த மாதிரி நிவாரண உதவிகள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய கணக்கீடுகள் ஏக்கிலும், இலங்கையிலும் செய்யப்பட்டது. மேலும் ஏக்கிலும் இலங்கையிலும், சுனாமிக்கு முன் உள்ள நிலைமையை ஆராய்ந்து அறிவதாகவும் இருந்தது.

நிவாரண உதவிகள் செய்வது என்ற விளையாட்டு, அவைகளைச் செய்கின்ற ஸ்தாபனங்களிடையே போட்டி ஏற்ற இறக்கம் முதலியவைகள் பெரும்பாடாகவே இருந்தன. ஆனால் இந்த விளையாட்டு அதிக நாட்களுக்கு முன்பே ஆரம்பமாகிவிட்டன. ஆனால் இவைகளுக்கு முழுபொறுப்பும், தவறுகளும், நன்மைகளும் இந்த நிறுவனங்களையே சார்ந்தது என்று முக்கியமாக கூற முடியாது. நிவாரணம், புணருத்தாரணம், வளர்ச்சி இவைகளோ பாதிப்பு, தேவைகள் முதலியவற்றை தொடர்பு படுத்தும் செயல், பொருளாதாரம், அரசியல், சமூக செயல்பாடுகள் இவைகள் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களின் சதவிகிதத்தை ஒத்து இருந்தன என்று சொல்லலாம்.

உதவி செய்யும் முகவைகள் இந்த நிவாரண புணருத்தாரண வேலைகளை முதலிலேயே துவக்கி விட்டன. இந்தத் தேவைகள் முதலிலேயே உணரப்பட்டு செயல்பட ஆரம்பமாயின. ஆனால் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பணத்தை உபயோகப்படுத்தும் செயலில் உள்ள தொய்மை, நிவாரண உதவிகள் இவைகள் இடையே உள்ள இடைவெளி தவிர்க்கப்பட்டு பேரழிவுக்கு அவைகள் உதவி செய்வதும் அறியப்படாமல் இருந்தது. ஆனால் சமூக உதவியாளர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை புணருத்தாரணம் செய்து கொண்டு மதிப்புடன் வாழ்வதற்கு உரிய வழிமுறைகளை அவர்கள் அறிந்து கொள்ளும் திறனை அவர்களுக்கு அளிக்கும் உறுதி அளித்தார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களை கட்டிடங்களில் குடியமர்த்துவது போன்ற நடவடிக்கைகள் மிகவும் தாமதமாகவே செய்யப்பட்டது. பெரும்பகுதி மக்கள் இன்னும் குடிசை கூடாரங்கள் போன்றவற்றிலேயே வாழ்ந்து வருகிறார்கள். முதலில் 1000 பேருக்கு 10 பேர் என்ற விகிதத்தில் வீடு

கட்டி தருவதாக உறுதியளிக்கப்பட்டது. அதுவும் சில மாதங்களிலேயே அதனால் இந்த உறுதிமொழிகளைச் செயல்படுத்துவதில் அலட்சியமும் முறைகேடுகளும் ஏற்ப்பட்டன. நில உரிமை, சுற்றுக் சூழல் போன்றவைகள் உதவி வேலை போன்றவற்றோடு தொடர்பு போன்றவைகள் காலவிரயம் ஆனது. இதன் விளைவாக கட்டிடங்கள் கட்டுவதில் தாமதம் ஏற்ப்பட்டது. இந்த மாதிரியான விளைவுகளினால் உதவிக்கரங்கள் நீட்டும் நிறுவனங்கள் மிகவும் போராட வேண்டிய சூழ்நிலை இருந்தது. நிலம் அளிப்பது, கட்டிடங்கள், வீடுகள் அளிப்பது போன்றவைகளால் இந்த நிறுவனங்கள் அலைக்கழிக்கப்பட்டன.

இவைகள் பிறகு மிக வேகமாக முன்னேறினாலும் மக்களுக்கு எந்த மாதிரியான வாழ்க்கை அமைத்துக் கொடுப்பது போன்றவைகளும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புணர்வாழ்வளித்து சின்னச் சின்ன படகுகளை அவர்களுக்கு அளித்து அவர்களுடைய மறுவாழ்வுக்கு வழிவகைகள் செய்வதும் போன்ற நடவடிக்கைகள் மீனவர்களுக்கு செய்து கொடுப்பதிலும் அவர்களுடைய நிதிநிலைமையைச் சீர்செய்வதிலும் ஒருவிதமான தொய்வு காணப்பட்டது.

எப்படி பாதிக்கப்பட்ட மீனவர்கள் தங்களை தாங்களே வளப்படுத்திக் கொள்வது. வருங்காலத்துக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்வது, வேலை வாய்ப்புக்களை ஏற்பாடு செய்து கொள்வது, ஏற்றத் தாழ்வுகள் களையப்படும் அவசியங்களும் ஆராயப்பட்டது.

சுனாமி ஆயிரமாயிரம் மக்களின் வாழ்வை சிதைத்து விட்டது. உதவி செய்யும் நிறுவனங்கள் இவ்வளவு பெரிய பேரிழப்பையும் அதற்குத் தகுந்த உதவிகள், நிவாரணங்கள் தொடர்பு இவைகளை மதிப்பீடுகள் செய்ய முடியாமல் திணறின. இதனால் முன்னேற்பாடுகள் செய்ய முடியாமை, உதவி செய்ய மறுக்கும் நிறுவன அமைப்புகள் இவைகள் ஏற்ப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் தொகை, புணர்நிர்மாண திட்டங்கள் இவற்றைப்பற்றிய சரியான செய்திகள் இல்லாமை இந்த புணரமைப்புத்திட்டத்தை செயல்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்தின. தகவல் ஒரு பலம் பொருந்திய ஒன்று. முயற்சிகளில் கலந்து கொள்வது முக்கயம். ஆனால் அதைவிட மிகவும் முக்கியம் தகவல்கள் சேகரித்தல் என்பது தகவல்களைச் சேகரித்தல். ஆனால் இவை ஒன்றுக்கொன்று மிகவும் தொடர்புடையவை.

அரசாங்கத்தின் முக்கியத்துவமும் மனிதசமூக தலைமையும் இந்த பேரழிவுக்குப் பின் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அந்த மக்களிடையே அவர்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்வதில் உள்ள தாமதத்தையும், தகுதியான மக்களுக்கு தரமான உதவிகளை செய்வதிலும் அவைகள் அவர்களை சென்று அடைவதில் சிக்கலையும் அதனால் ஏற்ப்படும் மனக்குமுறல்களும் இருந்தது. இவை ஏக்கிலும் இலங்கையிலும் உணரப்பட்டன.

தரமான உண்மையான நிவாரணப்பணிகளையும் பாதிக்கப்பட்ட மக்களின் தன்மைகளையும் எப்படி இணைப்பது, திட்டமிடுவது போன்றவைகள் அவசிய தேவைகளாக கருதப்பட்டன. இவற்றுள்

பாதிக்கப்பட்ட மக்களின் உடைமைகளை கொள்ளையடிக்கும் சமூக விரோத சக்திகளும் இருந்தன என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த இரு நகரங்களிலும் இவைகள் நடைபெற்றன. மேலும் தொண்டு நிறுவனங்களின் அலட்சியமும் இவைகளுக்குக் காரணம்.

ஆனால் முதல் முறை ஏற்ப்பட்ட சுனாமி அனுபவங்களின் படிப்பினைகள் இரண்டாவதாக வந்த சுனாமியின் பாதிப்பினால் ஏற்பட்டவற்றை சரிசெய்வதில் மிகவும் எச்சரிக்கையோடு செயல்பட உதவின. முதலில் ஏற்ப்பட்ட தவறுகள் மீண்டும் ஏற்ப்படாமல் இருக்க தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஏறக்குறைய எல்லா தொண்டு நிறுவனங்களும் ஏக், இலங்கை இந்த நாடுகளின் அரசியலமைப்புகளையும் அலட்சியம் செய்து வந்தன. தொண்டு நிறுவன அமைப்புகளும், அரசாங்கமும் இந்த இரு நாடுகளிலும் எப்படி பாதிப்புகளைச் சரிசெய்யலாம் எப்படி மக்களை இது போன்ற பேரழிவுக்கு உள்ளாக்காமல் வருங்காலத்தில் தடுக்கலாம் போன்றவற்றைச் செயல்படுத்துவதில் சிரமங்களையும், கால விரயமும் ஏற்பட்டன.

பாதிப்புகளை கணிப்பது மிகவும் சிரமம். உண்மையான தகவல்கள் சேகரிப்பதில் உள்ள சிரமம் இலங்கையிலும் ஏக்கிலும் இருந்தது. சுனாமி இந்த இரு நாடுகளிலும் அமைதியை ஏற்படுத்தவில்லை. அவசர தேலைகளை பூர்த்தி செய்ததற்க்கு பிறகு உள்ள செயல்பாடுகள் தொண்டு நிறுவனங்களை கட்டுப்படுத்துவதை விட, ஒற்றுமை ஏற்ப்படுத்துவதில் முக்கியத்துவம் காணப்பட்டது. இந்தக் கட்டுரை எழுதப்படும்போது, வன்முறைகள் - அதாவது டிசம்பர் 2005 வெடித்தது. ஆனால் இவ்வன்முறைகள் சுனாமி பாதிப்புகளைவிட தொண்டு நிறுவனங்களின் போட்டாபோட்டி, ஒற்றுமையற்ற நிலை, இவைகளே மிகவும் அதிகமாக காணப்பட்டன.

ஆனால், இந்தோனேஷியாவில் இந்த துக்ககரமான சம்பவங்கள் மாறுபட்டவைகளாக இருந்தன. ஏக்கில் இந்த முரண்பாடற்ற நிலைமை மிக விரைவாக சுனாமிக்கு முன்பாக களையப்பட்டது. ஏக்கிலுள்ள மக்கள் இவைகளின் செயல்பாடுகள் ஏற்படாமல் இருக்க இவைகளின் தேவைகளை அறிந்திருந்தார்கள். அதனால் வன்முறைகள் அதிகப்படாமல் இருந்தன. அதிகப்படியான வரிச்சுமைகள் குறைக்கப்பட்டன. மொத்தத்தில் எமர்ஜென்ஸி தளர்த்தப்பட்டது. வேலை முதலிய துறைகளின் வழிகள் கண்டறியப்பட்டன. மக்கள் கூட்டமாக கூட அனுமதிக்கப்பட்டது. பொதுமக்கள் தங்களுக்குள் எண்ணங்களைப் பறிமாறிக்கொள்ளவும் முன்னேற்ற எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டன.

நிவாரண புணர்நிர்மாண முன்னேற்றத் திட்டம் மட்டுமே ஒரு ஸ்திரமான செயல்பாடு அல்ல. இவற்றுக்கு நாடுகளின் அரசியல், பொருளாதாரம் பேரழிவுக்கு காரணமான சமூக நிலைமை இவைகள் தேவைப்பட்டது. உள்ளூர் நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு மேலும் உறவுகளை வளர்த்து கொள்ளும் அளவுக்கு முன்னேற்பாடுகளை முகவை நிறுவனங்கள் பெற்றிருக்கவில்லை. அபரிமிதமான வருமானங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி உபயோகமான முறையில் செலவிடலாம் என்பதை விட எப்படி அவற்றை சுருட்டலாம் என்ற கவலையே இந்த நிறுவனங்களின்

தன்மையாக இருந்தது. பொது நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வேலை வாய்ப்புக்களை பெருக்குவதன் மூலம் நிவாரண புனருத்தாரண முன்னேற்ற செயல்பாடுகளின் இடையே உள்ள தொடர்புகளை பாதிக்கப்பட்ட எதிர்கால வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியதாக உள்ள வழிமுறைகளை செய்தது.

இந்த நிறுவனங்களின் குறிக்கோள் எப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை கட்டித்தருவது போன்றவற்றை விட எப்படி இவைகள் செய்யும் சொற்பமான முயற்சிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்று அடைகின்றன என்பதை அறிய முற்படுவது என்பதைப்பற்றி இருந்தன.

அவர்களின் இந்தக் குறிக்கோளின் முக்கியத்துவம் புணர்நிர்மான வேலைகளை செய்வதில் எப்படியெல்லாம் அரசியல் சாதனங்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற விதத்தில் கொண்டு விட்டது. இது மேலும் எப்படி இந்த புணர்நிர்மாண உதவிகள் பாரபட்சமின்றி ஏற்ற தாழ்வுகளின்றி சுதந்திரமாக செயல்பட்டு மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தை ஊக்குவிப்பதாக அமைந்தது. மிகுந்த அரசியல் தலையீடுகளுக்கிடையே இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்களுடைய அமைப்புகள் புவியியல் ஏற்றத் தாழ்வுகள், பணவரவு, புணர்நிர்மாண உதவி இவற்றை செய்வதை மனிதவிதிகளை கடைப்பிடிப்பது போன்ற செயல்களுக்கு கேள்விக்குறியாக இருந்தது. இவைகள் இலங்கையில் அதிகமாக காணப்பட்டது.

மதிப்பீடு என்பது ஒரு பெரிய கவலையளிக்கக் கூடிய ஒன்றாகவும் அது ஒரு தெளிவான முடிவுகளை எடுக்க உதவுவதாகவும், புணர் நிர்மாண நிவாரண திட்டம் மிகவும் செயல்திறன் கொண்டதாக இருக்கக்கூடியதாகவும், தொண்டு நிறுவனங்களுக்கு அவற்றின் திறமைகளை வளர்த்துக் கொண்டு உள்ளூர் மற்றும் தேசிய முன்னேற்ற செயல்பாடுகளை ஈடுபடுத்த அவசியம் தேவைப்பட்டது. ஆனால் இந்த நிறுவனங்கிளல் ஒன்றும் இத்திறன் படைத்தவைகளாக இல்லை. அதனால் இந்த நிறுவனங்களிடம் இவற்றையெல்லாம் செயல்படுத்தும் பொறுப்பை ஒப்படைக்கவில்லை.

**ஆலோசனைகள்:**

நிர்மாண புனருத்தாரண முன்னேற்றத் திட்டம் கண்டிப்பாக அடித்தளத்திலிருந்து தேசிய அளவிலும் உள்ளமைப்புகளின் அளவிலும் அறியப்பட வேண்டும்.

திட்டம் நிறைவேற்றும் செயலுக்கும் உதவி திட்டங்களுக்கும் இடையில் இந்த அரசாங்கமும், அதிகாரிகளும் அரசாங்கம் சாராத பணி நிறுவனங்களும் தொழில் நிறுவனங்களும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக அமைந்து செயல்பட வேண்டும்.

நிவாரணம் மற்றும் புணர் அமைப்பு இவற்றின் இணைப்பு என்பதை வெற்றி கொள்ளப்பட்டது. ஆனால் நீண்ட கால நிவாரண பணிகள் என்ற முக்கியமான கட்டத்தை அடையும்படியான குறிக்கோளை எட்ட மிக மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அதனால் மிகவும் எச்சரிக்கையோடு செயல்பட

வேண்டும். தொண்டு நிறுவனங்கள் செய்த உதவிகள் மனித வாழ்வுக்கு பயன்படாமல் போனது ஒரு கேள்விக்குறியே ஆகும். ஆனால் இவைகள் சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை.

இந்த பேரழிவின் விளைவுகளினால் ஏற்பட்ட வறுமைக்கொடுமைகள் அழிக்கப்படும் தேவை உள்ளது. இதனால் இந்த புணர்நிர்மாண திட்டமானது காலம் காலமாக உள்ள வறுமையையும், பேரழிவுக்குப்பிறகு ஏற்படுகின்ற கொடுமையையும் அழிக்கும் விதமாக இருக்க வேண்டும். இருந்த போதிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வறுமைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இது சமூகத்திலும் உணரப்பட்டது எனினும் சரியாகச் செயல்படுத்தப் படவில்லை.

சுனாமி போன்ற இயற்கை பேரழிவுக்குப் பிறகு நேர்ந்த பயங்கரங்கள் போன்றவற்றை தவிர்க்கவும் மக்களுக்கு பொது பாதுகாப்பு அளிப்பதும் மிக முக்கியமான தேவைகளாக அறிப்பட வேண்டும்.

பேரழிவிலிருந்து மக்களைக் காப்பது, முன்னேற்பாட்டு செயல்கள் இவைகள் பணம் திரட்டுவதிலிருந்தும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதிலிருந்தும் மிகவும் அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதாக காணப்படவில்லை.

இன்னும் அதிகமாக மதிப்பீடு செய்தல் செய்கின்ற உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை சென்று அடைகிறதா என்று அறிதல், சுனாமி போன்ற இயற்கை சீற்றங்கள் வரும் முன்பே எச்சரிக்கை விடுதல், அவைகள் வராமல் தடுப்பது போன்றவைகள் செயல்படுத்தப்பட வேண்டும். தேசிய அமைப்புகளும் மற்றும் நிறுவனங்களும் இந்த பொறுப்புகளை தன் தோள்களில் சுமந்து கொண்டு இவற்றை செயல்படுத்துகின்ற தேவையிருக்கிறது. உதவிகள் அரசாங்கத்தை நோக்கி அதற்கு செயல்படுத்த உதவுகின்ற ஆதாரமாக இருக்க வேண்டும். இந்த அரசாங்கம் மக்களுக்கு வாழ்க்கையையும், குடிமக்காளக வாழும் தன்மையையும் அளிக்க வேண்டும்.

தகவல் சேகரிப்பு உத்திகளால் இந்த நிவாரண புணருத்தாரண முன்னேற்றத்திட்டம் நன்கு ஊக்குவிக்கப்பட்டு செயல் திறன் உள்ளதாக மாற்றப்பட வேண்டும்.

சரியான தகவல்கள் கிடைக்காத காரணத்தால் நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சரியான நேரத்தில் அடையாததால் தான் மனக் குமுறல்களும் மனக்கிலேசங்களும் கோபங்களும் தாபங்களும் ஏற்பட்டு சீரழிகின்றன. அதனால் நிர்மான புணருத்தாரண முன்னேற்ற திட்டங்கள் பலப்படுத்தப்பட்டு செயல்முறைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடியதாக அமைக்கப்பட வேண்டும்.

திட்டத்தின் விதிமுறைகள், தேசிய அளவிலான செயல்பாடுகள் இவற்றையெல்லாம் இணைத்து ஒன்றுக்கொன்று ஆதாரமாக்கிக் கொண்டு செயல்பட வைக்க வேண்டும். தேசிய இயந்திரங்களும் தனியார் நிறுவனங்களும் பொறுப்பை ஏற்று சுனாமி பாதிப்பில் ஒரு முனையாக செயல்படவில்லை. தொண்டு நிறுவனங்கள் மேலே குறிப்பிட்ட ஒற்றுமை இன்மையினாலும் பலவீனமான

ஒத்துழைப்பினாலும் பாதிக்கப்பட்டு தங்களுக்குள் குறுகிய வட்டத்துக்குள் செயல்பட்டு நிவாரண, புணர்நிர்மாண முன்னேற்றப் பணிகளை செய்வதற்கு ஆர்வம் காட்டின.

இந்தத் திட்டம் மிகவும் திறன்பட செயல்பட்டாலும், செயல்பட முடிந்தாலும் தொண்டு நிறுவனங்கள் அதிகமான வாக்குறுதிகளை கொடுத்து குறைவாகவே திட்டத்தை செயல்படுத்துவதாக அமைந்தது. செல்வந்தர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் தங்கள் மிகவும் அதிகமாக நிர்பந்தம் கொடுக்கப்பட்டு அவர்களுடைய தகுதிக்கு மேற்பட்டு அவர்களை ஈடுபடுத்துவதாக கருதினார்கள். அதனால் அவர்களுடைய தோல்வி பற்றிய விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு பொய் வாக்குறுதிகள் பற்றியே அதிகம் இருந்தது. இதனால் முன்னேற்றத்திட்டம் செயல்படாமல் போயிற்று.